பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 20 வியாழக்கிழமை 04.05.2023 கதிர் 175

## சட்டவிரோத விகாரைக்கு எதிராகப் போராட்டம்

# தையிட்டியில் பொலிஸாரின் அடக்குமுறையால் பதற்றம்

### போராட்டக்காரர்களுக்கு உணவு, தண்ணீர் வழங்கவும் தடை





☞2

## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபை வேட்பாளர்களாக உள்ள அரச பணியாளர்களை மீண்டும் வேலைக்கு அழைப்பது தொடர்பில் நேற்றும் வாகசர்களுக்களுக்குத் விவரங்கள் தெரிவித்திருந்தேன். இந்த விடயத்தில் யாராவது பிரச்சினை எடுத்தால் அவற்றைத் தாங்களேதான் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் தெரிவித்திருந்ததையும் குறிப்பிட்டிருந்தேன். அதாவது, அப்படி ஊழியர்களை வேலைக்கு அழைக்கும் திணைக்களத் தலைவர்கள் சொந்தக் காசில் சூனியம் வைத்துக்கொள்கிறார்கள் என்று தெரிவித்திருந்தேன்.

இதனை அடுத்து நேற்றுத் தமது கடமைகளைப் பொறுப்பேற்கச் சென்ற பல ஆசிரியர்களை

☞2

## நான்கு ஆண்டுகளின் பின்னர் கூடிய ஜனாதிபதி நிதியத்தின் ஆளும் சபை

நான்கு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி நிதியத்தின் ஆளும் சபை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் புதன்கிழமை கூடியது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்த ஆளும் சபைக் கூட்டம் நடந்தது. இந்தச் சபை ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க் கட்சித் தலைவர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் உட்பட 07 உறுப்பினர்களைக் கொண்டது.

இதன்போது, ஜனாதிபதி நிதியத்தினூடாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறனுள்ளதாக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு விசேட வேலைத்திட்டங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

ஜனாதிபதி நிதியத்துக்காக அபிவிருத்தி லொத்தர் சபையினால் பெறப்படும்

## பலாலிக்கான வான் சேவையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கான உத்தேச விமான சேவைகளை அதிகரிப்பதும் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கான கப்பல் சேவைகளை அதிகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு இந்த விடயங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார சுற்றுலாவை மேம்படுத்தும் என்று இந்திய விமானப்படைத் தளபதி ஏயர் சீவ் மார்ல் ஏ.சு.சௌத்ரி தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவை அலரி மாளிகையில் வைத்து சந்தித்த போதே அவர் மேற்கண்ட தெரிவித்தார்.

## போட்டியிடும் தொகுதியிலேயே கடமையாற்றினால்

# வேட்பாளரான அரச பணியாளர்கள் இடமாற்றத்தின் பின்பே கடமைக்கு

உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களாக உள்ள அரச பணியாளர்கள் தாம் போட்டியிடும் தொகுதியிலேயே பணியாற்றினால் அவர்களைஇடமாற்றம்செய்த பின்னர் பணிக்குத் திரும்ப அனுமதிப்பது என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும், செய்தியாளர் சந்திப்பு புதன்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கு அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 2023தேர்தலில் வேட்பாளர்களாக

# மாணவர்களின் உயிரைப் பறிக்காமல் மனிதநோயத்துடன் செயற்படுங்கள்

### அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல உருக்கம்

நாட்டில் உள்ள பெரும்பான்மையான அப்பாவி மாணவர்களின் உயிரைப் பறிக்காமல் தொழில்சார் போராட்டங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மனித நேயத்துடன் செயற்படவேண் டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர், ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உயர்தர வினாத்தாள்கள் பரிசீலிக்கப்படாமை

# உள்நாட்டுக் கடன்மறுசீரமைப்பு இன்னும் இறுதி முடிவு இல்லை

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இன்னமும் எந்தவொரு தீர்மானத்தையும் தமது ஆட்சி எடுக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்

அரச தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இன்னமும் இறுதியான தீர்மானிக்கப்படவில்லை. பலரும் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறி வருகின்றனர், இவையெல்லம் அவர்கள் கூறும் கதைகளே தவிர செயற்பாட்டில் எதுவும் நடைபெறவில்லை.

உள்நாட்டுக் கடனை எப்படி மறுசீரமைப்பது என்று விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அதேநேரம்,நாம் இன்னமும் சர்வதேச கடன் மறுசீரமைப்பையும்மேற்கொள்ளவில்லை. உள்நாட்டு கடன்களை மறுசீரமைக்கும்போது வைப்பாளர்களுக்குப் பாதகமான சூழல் ஏற்படாத வகையில் மூலோபாய முறையொன்று தயாரிக்கப்படவேண்டுமென ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார். அதற்கு அமைவாக அந்ததந்தக் குழுக்களிடத்தில் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன - என்றார்.

## தேர்தல் குறித்த ஜேவிபியின் மனு ஜூன் 9 இல் விசாரணைக்கு வரும்

2023மார்ச்9நடைபெற விருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிராக, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஜூன் 09 அன்று விசாரணைக்குஎடுத்துக்கொள்ளது என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அமைச்சரவை, திறைசேரி செயலாளர், பொது நிர்வாக அமைச்சின் அப்போதைய செயலாளர் நீல் பண்டார ஹப்புஹின்ன, அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே, பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர்

## இலங்கை - இந்திய உறவுகளை வலுப்படுத்த கலந்துரையாடல்

இரு தரப்பு உறவுகள் மற்றும் பொருளாதார பங்களிப்பைமேலும்வலுப்படுத்து-வது தொடர்பில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் நடந்த சந்திப்பில் இந்த விடயம் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச்சந்திப்பானது,தென் கொரியாவில் நடைபெற்று வரும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56ஆவது வருடாந்த மாநாட்டின் போது இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் நலனுக்கான பொருளாதாரபங்காளித்துவம் குறித்து பரஸ்பர கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன்,இலங்கையின் மிகவும் கடினமான மற்றும் சவாலான நேரத்தில் இந்தியாவினால் வழங்கப்பட்ட அனைத்து உதவிகளுக்கும் ஆதரவிற்கும் சீதாராமனுக்கும் இந்திய அரசுக்கும் மிக்க நன்றிகளை

# ஊடக சுதந்திரத்தை காக்கும் பொறுப்பு ஊடக நிறுவனங்களுக்குரியது - பந்துல

கொழும்பு, மே 04

ஊடக சுதந்திரத்தினை பாதுகாக்கும் பொறுப்பினை ஊடக நிறுவனங்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் பகிர்ந்து கொள்வதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பு, நிர்வாகம், மற்றும் சட்டம் ஒழுங்கு போன்றுஊடகங்களும்சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கு அளப்பரிய பணியை ஆற்றுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

ஊடகவியலாளர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தலைத் தடுத்து ஊடக சுதந்திரத்தினைப் பாதுகாப்பது இந்த ஆட்சியின் பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை எமது ஆட்சி முதற் கடமையாக நிறைவேற்றியுள்ளது.



எமது ஆட்சியை விமர்சிக்கும் ஊடகங்களோ ஊடகவியலாள்களோ ஒருபோதும் அச்சுறுத்தப்படவில்லை. எனினும் ஊடக சுதந்திரத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பினை அனைத்து ஊடக நிறு வனங்களுக்கும் ஊடக நண்பர்களுக்கும் வழங்குகின்றோம் - என்றார்.

## தேர்தல் மூலம் மீள ஆட்சியை பிடிக்குமாம் பெரமுன

தேர்தல் ஊடாக மீண்டும் ஆட்சியைப் பிடிப்போம் என்று பொது ஜன பெரமுனவின்நாடாளுமன்றஉறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்

பத்தரமுல்லவில்உள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனதலைமைஅலுவலகத்தில் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுஜன பெரமுனவுக்குமக்களாணைஉண்டு என்பதைமேதினகூட்டத்தில் உறுதிப்படுத்தியுள்ளோம். கட்சி என்ற ரீதியில் பலமாகஉள்ளோம். எதிர்வரும் நாட்களில் கட்சியின் புதிய தவிசாளர் தலைமையில் முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்படும்.

பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தலைமையில் கட்சி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களின்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 14ஆவது நிகழ்வு மே 18 முற்றத்தில்

முள்ளிவாய்க்கால்இனப் படுகொலையின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் மே 18ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்முற்றத்தில்முன்னெடுக்கப்படவுள்ளதாக வடக்கு கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேரினவாத மேலாதிக்கத்தின் தமிழ் இனவழிப்புச் சிந்தனையின் கொடிய கோரப்பற்கள் முள்ளிவாய்க்கால் மண்ணின் பிடியில் அடைக்கலம் அடைந்த ஈழத் தமிழினத்தின் இதயத்தில் ஆழப்பதிந்த நாட்கள் கடந்து போய் 14 ஆண்டுகள் நிறைவடையும் நாள் மே 18.

மனிதாபிமானத்தையும் மனித குல நலனையும் கையிலெடுத்து நவகாலனித்துவத்தை நிறுவும் கருவிகளாய் அவற்றை பாவித்து நிற்கும் இன்றைய நவீன உலக ஒழுங்கின் கர்த்தாக்கள் செயலின்றி பார்த்திருக்க, நடுநிலை வகிக்க வென்று வந்தவர்கள் நாதி இன்றி நாவடக்கம் காத்திருக்க துடிக்கத்துடிக்க நாம் கொத்துக்குண்டுகளாலும் கதிரியக்க காரணிகளாலும் நாகரிக உலகம் மனித குலத்திற்கொவ்வாது என தடை செய்த ஆயுதங்களாலும் போர் முறைகளாலும் முள்ளிவாய்க்கால் மண்ணில் பூவாய்ப், பிஞ்சாய், காயாய், பழமாய் வேறுபாடுகள்கடந்து இனப்படுகொலை செய்யப்பட்ட நாட்கள் நடந்து முடிந்து 14 ஆண்டுகள் கடந்துபோய் மே18 உடன்நிறைவடைகின்றது.

முள்ளிவாய்க்கால்வாரத்தில் (மே 11 - 18), முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறி தமிழினப் படுகொலை நினைவுத்தினத்தை நீதி வேண்டிய பயணத்தில் வினைத் திறன்மிக்கதாக்க தமிழ்த்தேசியத்தைநாளாந்த தேசியமாக உள்வாங்கி அடுத்த கட்ட நகர்வுக்கான உத்திகளைவகுக்க வேண்டி வரலாற்றுக்கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இந்நினைவேந்தல் தொடர்பானநிதிசேகரிப்புக்கள் தாய்நிலத்திலோபுலம்பெயர்த் தேசங்களிலோ

## சஜித்தை விளாசித் தள்ளிய ஐ.தே.கட்சி உறுப்பினர்

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதேவெற்றுக்கனவாக உள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மாற்றியப்பதாக கூறும் சஜித்தின் கூற்று சிறுபிள்ளைத்தனமானது என்று ஐக்கிய தேசிய கட்சி நிறைவேற்றுக்குழு உறுப்பினர் சாந்தினி கோங்கஹகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டும் என்று தாமே தொடக்கத்தில் தெரிவித்து வந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அவரது தரப்பினர் கூறுகின்றனர்.

அக்கூற்றின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் சர்வதேசநாணய நிதியத்தின் தீர்மானம்மீதானவாக்கெடுப்பு இடம்பெற்றபோது, அதற்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அந்தந்தப்பாடசாலைஅதிபர்கள் திருப்பி அனுப்பிவிட்டனர். சொந்தக் காசில் சூனியம் வைக்க விரும்பாத அவர்கள், வேட்பாளர்களான ஆசிரியர்களைக் கடமையைப்பொறுப்பேற்க அனுமதிக்கவில்லை. இதனை அடுத்து அவர்களைக் கடமைக்குத் திரும்பி வரும்படி கடிதம் அனுப்பிய வலயக் கல்வி அலுவலகத்தை ஆசிரியர்கள் தொடர்புகொண்டபோதுஅந்தக் கடிதத்தையும் கொண்டு வலயத்திற்குவரும்படிஅவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் திங்கட்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றிப் பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதாவது, வேட்பாளராக உள்ள அரச பணியாளர்கள் எவராவது தான் பணியாற்றும் பகுதியிலேயே தேர்தலில் போட்டியிடுவாராக இருந்தால் அவரை அவரது பணியிடத்தில் இருந்து இடம்மாற்றிவிட்டே பணியில் மீண்டும் சேர அனுமதிப்பது என்று அமைச்சரவை முடிவெடுத்துள்ளது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சருமான பிரதமர் டினேஸ் குணவர்த்தனவின் இந்த யோசனைக்குஅமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கின்றது.

இனி இது தொடர்பில் தெளிவான சுற்றறிக்கை ஒன்றை அமைச்சு வெளியிடும். அதனை அடிப்படையாகக் கொண்டே அரச பணியாளர்களாக உள்ள வேட்பாளர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்ப முடியும். 2019இல் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையிலேயே வடக்கு மாகாண சபை பணியாளர்களைத் திரும்பஅழைத்தது. ஆனால், அதில் நீதிமன்றத் தீர்ப்பு அல்லது அவசர நிலை காரணமாகத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் நிலையில் அரச பணியாளர்களான வேட்பாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்றே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நடக்க இருந்த உள்ளூராட்சித் தேர்தலோ இந்த இரு நிலைகளின் கீழும் ஒத்திவைக்கப்படவில்லை. பதிலாக எதிர்பாராத நிலை காரணமாகவே தேர்தல் ஒத்திவைக்கப்படுவதாக மாவட்டத் தெரிவத்தாட்சிஅலுவலர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் 2019 சுற்றறிக்கையின்படிசெயற்பட முடியாது என்பதாலேயே இது விடயத்தில் புதிய வழிகாட்டல், சுற்றறிக்கை தேவை என்று கொழும்பு கருதிச் செயற்பட்டது. அதற்கிடையில் வடக்கு மாகாணத்தில் இருந்த யாரோ ஒரு அதிபுத்திசாலியால் இந்த நிலமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே திணைக்களத் தலைவர்களால் பழிவாங்கப்பட்டு அல்லது மோசமாக நடத்தப்பட்டு அதற்குப் பதிலடி கொடுக்க இதுதான் சரியானதருணத்தைஎதிர்பார்த்திருந்தயாராவது வேட்பாளராகி, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நீதிமன்றத்தை நாடாத வரைக்கும் எல்லாத் திணைக்களத் தலைவர்களின் தலைகளும் தப்பிவிடும். இல்லையேல்சொந்தக் காசில்சூனியம்வைத்த கதையாகிவிடும்.

தையிட்டில் விகாரை அமைக்கப்பட்டதன் பின்னணி, அதற்குள்புதைந்துள்ள அரசியல் என்பன பற்றியெல்லாம் நாளை உங்களுக்கு விரிவாகக் கூறுகின்றேன் வாசகர்களே! அதுவரை பொறுத்திருங்கள்.

- இடிமின்னல் -

## தேர்தல் மூலம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிர்வாகம் தொடர்பில் விசேட கவனம்செலுத்தப்பட்டுள்ளன.

பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த போவதாக எதிர்க்கட்சியினர் குறிப்பிடுகிறார்கள். பிரதமர் தினேஷ் குணவர்தன பொதுஜன பெரமுனவின் மூத்த உறுப்பினர். கட்சியின் பெரும்பான்மை ஆதரவு, நாடாளுமன்ற நெறிமுறைகள் ஆகியவற்றுக்கு அமைய பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சிறந்த முறையில் செயற்படுகிறார்கள். பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். எம்மைப்பொறுத்தவரையில் சூழ்ச்சிகளால் ஆட்சியை மாற்றிஅதிகாரத்தைப்பெற்றுக் கொள்ளவேண்டியஅவசியம் கிடையாது. அடுத்த தேர்தலில் மக்கள் ஆணையுடன் மீண்டும் ஆட்சி அமைப்போம் - என்றார்.

## சஜித்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நழுவிச் சென்றனர்.

அதன்மூலம்சொல்வதை செய்ய முடியாத எதிர்க்கட்சித்தலைவரே உள்ளார் என்பது வெளிப்பட்டுள்ளது. அதேநேரம், குறித்த வாக்களிப்பில் அந்தக் கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியான ஏ.எச்.எம். பௌசி, நாட்டுக்காக வாக்களிப்பதாக தெரிவித்து, தீர்மானத்துக்கு ஆதரவளித்தார்.

இவ்வாறிருக்கையில், தற்போதைய ஆட்சிசர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை, தங்களது ஆட்சியில் மாற்றியமைப்பதாக சஜீத் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அவரின் இந்த கூற்று சிறுபிள்ளைத்தனமானது. ஐக்கியமக்கள்சக்திக்குநாட்டை ஆட்சி செய்ய ஒரு போதும் மக்கள் ஆணை கிடைக்கப்போவதில்லை. ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் கனவுலகில் இருந்து கொண்டு இவ்வாறு கூறுகின்றார் - என்றார்.

## முள்ளிவாய் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினால் அனுமதிக்கப்படவில்லை என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது.

## இலங்கை - .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மீண்டும் தெரிவித்துக்கொள்வதோடு பொருளாதார மீட்புச் செயற்பாட்டிற்கு சாதகமாக பங்களித்து வருவதற்காகவும் நன்றிகளை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் குறித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்படப்பட்டுள்ளனர்.

முர்து பெர்னாண்டோ, பீ.பி.அலுவிஹாரே, பிரி யந்த ஜயவர்தன, விஜித் மு மலல்கொட மற்றும் ஈ.ஏ. ஜி.ஆர். அமரசேகர ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மேற்படி மனு புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணைகளை ஜூன் 9 தொடங்குவது என்று நீதியரசர்கள் தீர்மானித்தனர்.

## மாணவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர்எழுப்பியகேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடன் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, அரச ஊழியர்கள்உட்படஇலங்கை மக்கள்இந்தநேரத்தில்பெரும் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள், பொருளாதாரப் புரிதல் இருந்தால் ஒரு தரப்பினருக்கு மட்டும் இந்த நேரத்தில் நிவாரணம் வழங்க முடியாது என்பதை அனைத்துப்பல்கலைக்கழக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் புரிந்து கொள்ளவேண்டும். .

இந்த வினாத்தாள் பிரச்சினையால்இலட்சக்கணக்கான அப்பாவி மாணவர்களைப் பணயக் கைதிகளாக வைத்துக்கொண்டு தொழில் சார்போராட்டத்தில்ஈடுபடுவது பொருத்தமற்ற செயலாகும். தற்போதுநாட்டில்இலவசக்கல்வியின்நம்பகத்தன்மைபெருமளவில்சிதைவடைந்துள்ளமையினால் ஆங்கிலம் பேசத் தெரிந்த பலர் தமது பிள்ளைகளுக்கு சாதாரண தரம் வரை மட்டுமே கல்வியை வழங்குகின்றார்கள்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பின்னர், டிப்ளோமா கற்கை நெறிகள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான வாய்ப்புகள் பல காணப்படுவதாக வார இறுதி ஆங்கில நாளிதழ்களில் பிரசுரிக்கப்படுகின்றன. இலங்கையிலுள்ள பெரும்பாலான நகர்ப்புறப் பெற்றோர்கள் தமது சொத்துக்களை அடகு வைத்தாவது தமது பிள்ளைகளுக்கு வெளிநாட்டில் கல்வி கற்க வாய்ப்புகளைஅமைத்துக்கொடுக்கின்றார்கள்.

இந்தப் பிள்ளைகளுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லாவிட்டாலும், ஏனைய குழந்தைகள் சாதாரண தரம், உயர்தரம் என எழுதினாலும், அவர்களுடைய விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படாமல், மூன்று நான்கு வருடங்கள் அவர்களின் வாழ்க்கை வீணாகிவிடும். இது நியாயமற்றது - என்றார்.

## வேட்பாளரான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ள அரச பணியாளர்கள் தேர்தல் நடத்தப்படும் தினம் வரையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தேர்தல்கள் ஆணைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களைக் கருத்திற் கொண்டு, அத்தகைய அரச பணியாளர்கள் மீண்டும் கடமைக்குத் திரும்புவது தொடர்பில் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி வேட்பாளர்களான அரச பணியாளர்கள் தாம் போட்டியிடவுள்ள தேர்தல் வட்டாரத்தில் அரச அல்லது பகுதி அளவிலான அரச நிறுவனத்தில் பணியாற்றி இருப்பாராயின் அவர்களைக் குறித்த தேர்தல் வட்டாரத்திற்கு வெளியே இடமாற்றம் செய்த பின்னர் கடமைக்குத் திரும்பச் சந்தர்ப்பம் வழங்கப்படும் - என்றார்.

## நான்கு ஆண்டு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வருமானம் மற்றும் பல்வேறு நன்கொடையாளர்களினால் வழங்கப்படும் நிதி என்பன பயன்படுத்தப்படுவதுடன், ஜனாதிபதி நிதியத்திற்குக் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதிக்கும் வழங்கப்படுகிறது.

வறுமை ஒழிப்பை முதன்மை நோக்கமாக கொண்ட ஜனாதிபதி நிதியம் நோயுற்றவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு அதிக பங்களிப்பை வழங்கியுள்ளதோடு, இதன் கீழ்பல்வேறுநோய்களுக்கான அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவசிகிச்சைக்குநிதியுதவி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி நிதியத்திற்கு ஒரு லட்சத்தது 20 ஆயி ரம் மருத்துவ உதவிக் கோரிக்கைகள் கிடைத்திருந்ததோடு, ஜனாதிபதியின் பணிப்புரை மற்றும் ஜனாதிபதியின் செயலாளரின் வழிகாட்டலின் கீழ், அவற்றை 31.12.2022 க்குள் பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

அதன்படி, குவிந்து கிடந்த விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் நிறைவடைந்து, தகுதியான பயனாளிகளுக்கு உதவிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, இதற்காக ஆயிரத்து 717 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நிதி செலவிடப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில், விண்ணப்பதாரர்களுக்கு மருத்துவ உதவி வழங்க பல ஆண்டுகள் சென்றதைக் காணமுடிந்தது. இதற்கு ஒரு தீர்வாக, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத் குமாரவின் வழிகாட்டுதலின் கீழ், விண்ணப்பச் செயல்முறைஒருவாரகாலத்துக்கும் குறைந்த காலப்பகுதியில் விண்ணப்பதாரர்கள்நன்மைகளைப்பெறக்கூடியவகையில் புதிய முறைதிறம்படவும்எளிமையானதாகவும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவச்சலுகைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகள் முக்கிய நகரங்களுக்கு அருகாமையில் அதிகமாக அமைந்துள்ளதால், கிராமப்புறங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளின் பதிவைத் ஆரம்பிப்பதன் மூலம், தொலைதூரப் பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு கிராமப்புற பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில்சிகிச்சை/அறுவை சிகிச்சையைப்பெறுவதற்கான மருத்துவ உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் ஜனாதிபதி நிதியத்தினால் நிதியுதவி வழங்கும் நோய்களுக்கு மேலதிகமாக நோயாளர்களின் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் பரிந்துரையுடன் புதியநோய்கள்உள்வாங்கப்பட உள்ளமையினால் அதிகளவான நோயாளர்கள் பயன்பெற முடியும்.

தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அறுவை சிகிச்சை/ மருத்துவ செலவு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, அனைத்து நோய்களுக்கும் மருத்துவ உதவியாக வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகையின் அளவை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## தையிட்டியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தையிட்டில் படை முகாம் பகுதிக்குள் சட்டவிரேதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு எதிர்ப்புத் தெரி வித்து தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் அழைப்பில் இடம்பெற்ற தொடர் போராட்டத்தைக் கலைக்க புதன்கிழமை இரவு பொலிஸார் நடவடிக்கைகளில் இறங்கியதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் விரட்டியடிக்கப்பட்டனர். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்ட சிலர் போராட்ட இடத்தைவிட்டு அகல மறுத்ததால் அங்கு இரவிரவாகப் பெரும் பதற்றம் நிலவியது.

பலாலி படை முகாம் பகுதிக்குள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளில் அனுமதியின்றிச் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டு அண்மையில் கலாச குடமுழுக்குக் கண்ட தையிட்டிவிகாரையைஅகற்றுமாறு கோரி புதன்கிழமை பிற்பகல் போராட்டம் தொடங்கியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இந்தப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியினால் அழைப்பு விடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில்தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். பருத்தித்துறை வீதி, தையிட்டி கலைவாணி வீதி முகப்பில் தொடங்கிய ஆர்ப்பாட்டம் ஊர்வலமாக நகர்ந்து தையிட்டி விகாரை வரை சென்று விகாரைக்கு முன்பாக நிலை கொண்டது.

14 குடும்பங்களுக்குச் சொந்தமான அண்ணளவாக 8 ஏக்கர் காணியை விடுவிக்க கோரியும் சட்டவிரோதமாக கட்டப்பட்ட பௌத்தக் கட்டுமானத்தை அகற்றக் கோரியும் பௌத்தமயமாக்கல்திணிப்பை எதிர்த்தும்போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தை யொட்டி விகாரை முன் பாகப் பொலிசார் குவிக்கப் பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. விகாரைக்குச் செல் லும் பாதையை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட வேண்டாம் என்று பொலிஸ் அதிகாரிகள் போராட்டக்காரர்களுடன்வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து விகாரைக்குச் செல்லும் வீதியின் எதிர்க்கரையில் போராட்டக்காரர்கள் நிலை எடுத்தனர். அங்கிருந்தபடி தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். இரவு சுமார் 8 மணியளவில் திடீரென அந்தப் பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்தத் தொடங்கினர். வீதித் தடுப்புக்களை ஏற்படுத்தினர். கூர்மையான இரும்புக் கம்பிகளோடான தடுப்புக்களையும் நிறுவினர். வீதிகளின் குறுக்கே வாகனங்களைநிறுத்திபாதைகளை மறித்தனர். போராட்டம் இடம் பெற்ற பகுதிக்குள் எவரும் நுழைவதைத் தடை செய்தனர்.

இவ்வளவுமுன்னேற்பாடுகளுக்கும்பின்னர்போராட்டக்காரர்களை அங்கிருந்து விரட்டத் தொடங்கினர். பெரும்பாலானவர்கள் விரட்டப்பட்டுவிட்டபோதும் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னணித் தலைவர்களில் ஒருவருமான செ.கஜேந்திரன், முன்னணி செயற்பாட்டாளர் சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்ட சிலர் தாம் அமர்ந்திருந்த இடத்தைவிட்டு அகல மறுத்து அங்கேயே அமர்ந்திருந்தனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. இரவிரவாகப் அவர்களையும்அங்கிருந்து அகற்றப் பொலிஸார் தீவிரமாக முயன்றனர். எனினும் அவர்கள் தாம் அமர்ந்திருந்த இடத்தைவிட்டு நகரவில்லை.

இதையடுத்து அவர்களுக்கான உணவு, தண்ணீர் என்பவற்றை வழங்குவதையும் பொலிஸார் தடை செய்தனர். அவர்கள் அமர்ந்திருந்த இடத்திற்குச்செல்லஎவரையும் அனுமதிக்கவில்லை. பொலிஸ் தடைக்கு அப்பால் முன்னணி ஆதரவாளர்கள் பொலிஸாருடன் பேசி போராட்டத்தில் இருப்பவர்களுக்கான தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப முயற்சித்தபோதும் அதற்கு அனுமதிவழங்கப்படவில்லை. (03)











காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கை - இந்தியா இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுப்படும்

## ஜனாதிபதியை சந்தித்து இந்திய விமானப்படை பிரதானி தெரிவிப்பு

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் வலுவாக்குவதற்கானவாய்ப்புக்கள்குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பில், இந்திய விமானப்படை பிரதானி எயார்சீப்மார்ஷல்வி.ஆர்.சௌத்ரி கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கு நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய விமானப்படை படைப்பிரதானி எயார்சீப்மார்ஷல்வி.ஆர்.சௌத்ரி செவ்வாய்கிழமை ஜனாதிபதி மாளிகையில்ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போதேஇந்தவிடயம்தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளைநேற்று(புதன் கிழமை) இந்தியவிமானப்படை படைப்பிரதானிக்கும், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்குமிடையிலான சந்திப்பொன்றும் அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின் போது இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து அளித்து வரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்த பிரதமர், இலங்கைக்கடற்பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட பேரிடர்களின் போது உதவிகளை வழங்குவதற்கான கோரிக்கைக்கு உடனடியாகப் பதிலளித்த இந்திய விமானப் படைக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு நாட்டு விமானப்படைகளுக்கிடையே உள்ள நெருக்கமான ஒத்துழைப்பின் அடையாளமாக, திருகோணமலையில் உள்ள இலங்கை விமானப்படை தளத்தில் நட்புறவு கேட்போர் கூடத்தை நிர்மாணிக்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளதாக எயா சீப மார்ஷல் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வருடத்தின் இறுதிக் காலாண்டில் இரு நாட்டு விமானப் படைகளும் இலங்கைக் கரையோரப் பகுதியில்அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான கூட்டுப்பயிற்சியை மேற்கொள்ளவுள்ளதாகவும், இலங்கையின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியை மேலும் வலுப்படுத்த இந்தியா அதன் ஒத்துழைப்பை அதிகரிக்கும் எனவும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, பலாலி விமான நிலையத்துக்கூடான விமான சேவைகளை அதிகரிப்பதுதொடர்பிலும், தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கான பயணிகள் படகு சேவையைவிரைவில்ஆரம்பித்தல் தொடர்பிலும் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# பாண், வெதுப்பக உணவுகளின் விலையை குறைக்க முடியாதாம்!

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின்விலைகுறைப்புக்கு அமைய பாண் உட்பட வெதுப்பக (பேக்கரி) உணவு பொருள்களின் விலையை குறைக்க முடியாது.

ஒரு புறம் விலையை குறைத்து மறுபுறம் மூலப் பொருள்களின் விலையை அதிகரிக்கும் போது விலை குறைப்பது சாத்தியமற்றது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி உணவுபொருள்களின்விலைகுறைப்புதொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலை குறைப்புக்கு அமைய பாண் உட்பட வெதுப்பக உணவு பொருள்களின் விலைகளை குறைக்க முடியாது. அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்களால் எமது தொழிற்துறை பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

ஒருபுறம் விலையை குறைத்துமறுபுறம்கோதுமை மா, சீனி, முட்டை ஆகியவற்றின் விலை பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின்விலைகுறைப்புக்கு அமைய எவ்வாறு பேக்கரி உணவு பொருள்களின் விலையைக் குறைக்க முடியும்.

மின்கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் எமது தொழிற் துறை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினைகள் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் பல முறை கலந்துரையாடி கோரிக்கைகளை முன்வைத்தோம்.

இருப்பினும் எவ்வித பயனும் இதுவரை கிடைக்கவில்லை.மூலப்பொருள்களின் விலை குறைவடைந்தால் பாண் உட்பட ஏனைய உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கலாம். - என்றார்.

# கைத்துப்பாக்கி தவறுதலாக வெடித்து கான்ஸ்டபிள் காயம்

## ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கைத்துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்தநிலையில்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவம் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு வீதி ரோந்து கடமைக்காக கைத்துப்பாக்கி வழங்கப்பட்டிருந்தது.

அவர் சம்பவதினமான நேற்று (புதன்கிழமை) அதிகாலை 3 மணிக்கு கடமையை முடித்துக்கொண்டு அந்த கைத்துப்பாக்கியை ஆயுத களஞ்சி பொறுப்பாளரிடம் வழங்க முற்பட்டபோது தவறுதலாக கைத்துப்பாக்கி வெடித்தது.

இதன்போது, களஞ்சிய பொறுப்பாளரான பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் காலில் துப்பாக்கி வெடித்து சூடு ஏற்பட்டதையடுத்து, படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.

# சுவிஸ் தூதரக ஊழியர் மீதான குற்றப்பத்திரிகையை திருத்த சட்டமா அதிபருக்கு நீதிமன்றம் அனுமதி!

கொழும்பு, மே 04

2019 ஆம் ஆண்டு கடத்தப்பட்டதாகக் கூறப்படும் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் ஊழியர் கார்னியா பன்னிஸ்டர் பிரான்சிஸுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையை திருத்துவதற்கு கொழும்பு மேல் நீதிமன் றம் சட்டமா அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த வழக்கு நேற்று (புதன்கிழமை) காலை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் திருத்தம் செய்யவேண்டும் என்ற சட்டமா அதிபரின் கோரிக்கையை நீதிபதி ஏற்றுக்கொண்டு அனுமதியை வழங்கியுள்ளது.

2019 டிசெம்பர் 16 அன்று, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கார்னியா பன்னிஸ்டர் பிரான்சிஸ், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அரசாங்கத்துக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்த வழக்கில் அவர் சந்தேகநபராக பெயரிடப்பட்ட பின்னர், அவர் டிசெம்பர் 30 அன்று தலா 500,000 ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2019 ஆம் ஆண்டு கொழும்பில் உள்ள செயின்ட் பிரிட்ஜெட் கான்வென்ட்டுக்கு அருகில் இருந்து தான் கடத்தப்பட்டார் எனவும், நவம்பர் 25 ஆம் திகதி வெள்ளை வானில் வந்த ஆயுதம் ஏந்திய குழுவால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டார் எனவும் அவர் முறைப்பாட்டை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளுக்குப் போதுமான அளவு எம்ஓபி, யூரியா உரம் வழங்க முடிவு!

*மியூரேட் ஒஃப் பொட்டாஷ் உரம் மற்றும் யூரியா உரங்களை போதிய அளவில் விவசாயிகளுக்கு வழங்க விவசாய அமைச்சு முடிவு செய்துள்ளது.*

*நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு உரம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் புதன்கிழமை இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.*

*அரசாங்கம் வழங்கிய உர மானியங்களை முன்னர் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.*

*இதன்படி, விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்ய ஹெக்டேருக்கு 20 ஆயிரம் ரூபாவும், 02 ஹெக்டேருக்கு 40 ஆயிரம் ரூபாயும் மானியமாக வழங்கப்படும்.*

*எனவே, யூரியா உரத்தை இந்த ஆண்டு பெரும்போகத்துக்கு விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் கொள்வனவு செய்யமுடியும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.*

# நானு ஓயாவில் காலாவதியான 200 கிலோ கோதுமை மா மீட்பு

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நானுஓயா எடின்பரோ தோட்டத்தில் தோட்டத்தொழிலாளிகளுக்கு வழங்குவதற்கு வைத்திருந்ததாக கூறப்படும் காலாவதியான 200 கிலோ எடையுள்ள கோதுமை மா நானுஓயா சுகாதார பரிசோதகர்களால் மீட்கப்பட்டுள்ளது.

தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்த தகவலின் படி அனைத்து எடின்பரோ தொழிலாளர்களும் ஒன்றிணைந்து தேயிலை தோட்டத்தொழிற்சாலை யின் நுழைவாயிலுக்கு அருகே இருந்து தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் முரண்பட்டுக் கொண்டிருந்தன.

இதனை அடுத்து நானு ஓயா பொலிஸாருக்கும், நானுஓயா சுகாதார பரிசோதருக்கும் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே தோட்டத்தின் களஞ்சியசாலையிலிருந்து 200 கிலோ கிராம் கோதுமை மா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த தோட்ட முகாமையாளர் குறிப்பிடுகையில் காலாவதியானகோதுமைமா இருந்தமை உண்மைதான். ஆனால் அவை தோட்டத் தொழிலாளர்களுக்கு விநியோகம் செய்யவில்லை, தொழிற்சாலையின் களஞ்சியசாலையில் காலாவதியான பொருள்கள் வைத்திருந்த இடத்திலேயே இந்த நான்கு மூடைகள் அடங்கிய 200கிலோகோதுமைமாவை வைத்திருந்தோம், தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதம் ஒருமுறை வழங்கும் கோதுமை மா சுத்தமான ஒதுக்குப்புறமான களஞ்சியசாலையில் புதிய விளம்பர அறிவித்தல்கள் ஒட்டப்பட்டும், காலாவதியாகும் திகதிகள் பொறிக்கப்பட்டும் தனியான அறையில் வைத்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து தேயிலை தோட்டத் தொழிற்சாலை யின் நுழைவாயிலுக்கு அருகில் இருந்து தொழிலாளர்களைகலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவித்ததையடுத்து தொழிலாளர்கள் அதற்கு இணங்கி கலைந்து சென்றனர்.

இதன்போது தோட்ட நிர்வாக அதிகாரிகளிடம் மேற்கொண்ட விசாரணைகளில் காலாவதியான கோதுமைமா வைத்திருந்து தெரியவந்தது.

அத்தோடு வழமைக்கு மாறாக கோதுமை மாவில் துர்நாற்றம் வீசுவதாகவும், காலாவதியான 200 கிலோ கோதுமை மா கைப்பற்றி கோதுமை மா வைத்திருந்த களஞ்சியசாலையும் முற் றுகை இடப்பட்டு இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்ட பின் உரிய நடவடிக்கைகள் எடுக்கஇருப்பதாகநானுஓயா சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# லாப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை

லாப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என அந்நிறுவனம் நேற்று (புதன்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு காரணமாக உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகள் அதிகரித்துள்ளன எனவும் இவ்வாறான சவாலுக்கு மத்தியிலும் லாஃப்ஸ் சமையல்எரிவாயு வாடிக்கையாளர்களுக்கு நியாயமான விலையில் எரிவாயுவை தொடர்ந்து வழங்குவதாக நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

அதன்படி, லாப் சமையல் எரிவாயு கொழும்பில் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 3,990 ரூபாவாகவும் 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 1,596 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

# இடிமின்னல் ஏற்படும்போது அவதானமாக செயற்படுக!

## அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் சூரியராஜ் அறிவுரை



மின்னல் ஏற்படும் போது பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு யாழ் மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

தற்போதுள்ள காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவி வருகின்ற சீரற்ற காலநிலை காரணமாக 22 குடும்பங்களை சேர்ந்த 79 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதில் குறிப்பாக சாவகச்சேரி, மருதங்கேணி, ஊர்காவற்துறை, கோப்பாய் பிரதேச பிரிவுகளில் பெரும் பாலான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்ட மினி சூறா வளி காரணமாக 16 குடும்பங்களை சேர்ந்த 56 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 15 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது.

மேலும், மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி பகுதியில் ஒரு பாடசாலையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்தோடு, ஊர்காவற்துறை பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தின் காரணமாக ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த 19 பேர் பாதிக் கப்பட்டுள்ளதோடு வீடு களில் காணப்பட்ட மின் உபகரணங்கள் பாதிப்பு அடைந்துள்ளன. அத்தோடு கோப்பாய் பிரதேசத்தில் மழையின் காரணமாக ஏற்பட்ட மின்னொழுக்கினால் ஒரு வீட்டில் இருந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த காலநிலை ஒரு வாரமாகத் தொடருமென எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். குறிப்பாக மின்னல்தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். குறிப்பாக மின்னல் தாக்கங்கள் ஏற்படும் நேரங்களில் மின் உபகரணங்கள் தொலைபேசிகள் பாவனையை கட்டுப்படுத்துவதுமிகவும்சாலசிறந்தது. - என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சட்டம் ஒழுங்குக் காவலர்கள் மீதே சட்ட நடவடிக்கை தேவை

தையிட்டியில் சட்டத்தின் காவலர்கள் சட்டத்துக்கு மாறான நடவடிக்கையைப் பாதுகாத்து மக்களின் அமைதியான போராட்ட உரிமைகளை மறுத்திருப்பது மிக மோசமான செயல். இதுபோன்ற நடவடிக்கைகள்தான் இலங்கையின் படைத்துறைகளும் சட்டம் ஒழுங்குத் துறையும் இனவாதத்திற்குள் மூழ்கிக் கிடக்கின்றன என்கிற குற்றச்சாட்டுக்கும், இத்தகைய நடவடிக்கைகள் அனைத்துக்கும் ஆட்சியாளர்களின் ஆசீர்வாதம் முறையாகக் கிடைக்கின்றது என்கிற குற்றச்சாட்டுக்கும் காரணம்.

யாழ். மாவட்டம் வலி. வடக்கு பகுதியில் அமைந்திருக்கிறது தையிட்டி. இந்த இடத்தின் கணிசமான பகுதிகள் மக்களின் மீள் குடியமர்வுக்கென விடுவிக்கப்பட்டுவிட்டன. தையிட்டியின் சொற்ப பகுதிகள் மட்டும் பலாலி தரைப் படைத் தலைமையகம் அமைந்துள்ள முகாம் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கு படைக் கட்டுமானங்கள் எதுவும் இல்லை என்கிறபோதும் முகாம் பகுதிக்குள் இது உள்ளடக்கப்பட்டுள்ளது. இங்கு விகாரை அமைக்கும் நோக்கத்திற்காகவே இந்த இடம் தொடர்ச்சியாக முகாம் பகுதிக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதற்கு எல்லாவிதமான நியாயங்களும் இருக்கின்றன.

முகாம் பகுதிக்குள் அடங்கியுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான சுமார் 8 ஏக்கர் காணியை விகாரைக்காக ஆக்கிரமித்துள்ளார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அதற்குள்தான் இப்போது 100 அடி உயரமான – யாழ்ப்பாணத்திலேயே உயரமான – விகாரை அமைக்கப்பட்டிருக்கின்றது. இதே பகுதிக்குள் நயினாதீவு நாகவிகாரைக்குச் சொந்தமான குறிப்பிட்டளவு நிலம் உண்டு. அதேபோன்று இப்போது அமைக்கப்பட்டுள்ள விகாரையின் பெயரிலேயே முன்னர் காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்குள் ஒரு விகாரை அமைந்திருந்தது, அந்த நிலமும் உண்டு. இப்படி விகாரை அமைப்பதற்குச் சட்டபூர்வமான இடங்கள் இருக்கத்தக்கதாக மக்களின் காணிகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட ஒரு சட்டத்துக்குப் புறம்பான விகாரையைப் பாதுகாப்பதற்கு இலங்கைக் காவல்துறை அதிகாரிகள் காட்டும் சிரத்தையை மக்கள் போராடுவதற்கு உள்ள அடிப்படை உரிமையை மதிப்பதற்கு அவர்கள் காட்டமறுப்பதன் ஒரே அடிப்படை, விகாரை சிங்களவர்களுக்குரியது எதிர்த்துப் போராடுபவர்கள் தமிழர்கள் என்பது மட்டும்தான்.

சட்டத்துக்குப் புறம்பாகத் தற்போது அமைக்கப்பட்டுள்ள விகாரைக்கு அருகே உள்ள நயினாதீவு நாகவிகாரைக்குச் சொந்தமான நிலத்தில்தான் இந்தப் புதிய விகாரையை அமைப்பதற்கு முதலில் வலி. வடக்குப் பிரதேச சபையிடம் அனுமதி கோரப்பட்டது. பௌத்தசாசன அமைச்சிடம் இருந்து முதலில் விகாரைக்குரிய அனுமதியைப் பெற்ற பின்னர் பிரதேச சபையின் அனுமதிக்கு விண்ணப்பிக்குமாறு அதற்குரிய பிக்குவிற்கு அறிவுறுத்தல் வழங்கியதன் பின்னர்தான், பலாலியில் உள்ள தரைப்படையினரின் உதவியோடு அந்தப் பிக்கு இந்த ஆக்கிரமிப்பு விகாரையைக் கட்டத் தொடங்கினார். அப்போதே இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. தெல்லிப்பழை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இதற்கெதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அப்படிப் பார்க்கும்போது சட்டம் ஒழுங்குக் காவலர்களான காவல் துறையினர் அமைதிக் குலைவை ஏற்படுத்தும் வகையில் இந்த சட்டத்துக்குப் புறம்பான விகாரையை அமைத்த பிக்குவையும் அதற்கு உதவிகளைச் செய்த தரைப் படை அதிகாரிகளையும்தான் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் எல்லோரும் சிங்களவர்கள் என்கிற அடிப்படையில், அதைச் செய்யாமல் போராடும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்க்கின்றனர் காவல்துறையினர்.

1956இல் கொழும்பு காலி முகத் திடலில் நடந்த அமைதியான சத்தியாக்கிரகத்தை காவல்துறையினர் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துக் கலைத்தமையை ஞாபகப்படுத்துகின்றது இந்தச் சம்பவம். அந்த அடக்குமுறை பின்னர் 30 வருடங்கள் இந்த நாட்டை நிலைகுலைய வைத்த ஒரு போருக்கு இட்டுச் சென்றது. இப்போதும் சட்டக் காவலர்கள் சட்டத்துக்குப் புறம்பான காரியங்களுக்கு ஆதரவாக மக்கள் மீது கட்டவிழ்த்துவிடும் அடக்குமுறைகள் நாட்டை மீண்டும் எங்கே கொண்டு சென்று நிறுத்துமோ தெரியாது.

அப்படி நடந்துவிடாமல் இருப்பதற்கு ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் தலையிட்டு, எந்த அனுமதியும் பெறப்படாமல் சட்டத்துக்குப் புறம்பாக கட்டப்பட்ட விகாரையை அமைத்தவர்களுக்கு எதிராகக் காவல்துறையினர் சட்டநடவடிக்கை எடுக்கவும், இந்த சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைக்கு ஆதரவளித்த தரைப்படை மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் வழிப்படுத்தவேண்டும். முறைமை மாற்றம் பற்றிப் பேசும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுபோன்ற சட்டத்தை மதிக்காதவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி முறைமை மாற்றத்தைத் தொடக்கி வைத்தால் மட்டுமே இந்த நாடு உருப்படுவதற்கான வழி திறக்கும்.

## கௌதாரிமுனையில் காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்திற்கு அனுமதி வழங்குவதற்கு மறுப்பு



பூநகரி கௌதாரிமுனையில் காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்துக்கு அனுமதி வழங்க மாவட்ட அபிவிருத்திக் குழு மறுப்பு தெரிவித்துள்ளது.

நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற கூட்டத்தில் அதற்கான அனுமதி கோரப்பட்ட போதும் முழுமையான சாதக பாதக நிலை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தீர்மானிக்க முடிவு எடுக்கப்பட்டது.

மேற்படி விடயம் தொடர்பில் தாம் இதுவரை அறியவில்லை எனவும், இன்றே அறிய முடிந்ததாகவும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், சிறிதரன், கஜேந்திரன் இது தொடர்பில் ஆராய்ந்தே அனுமதி வழங்க வேண்டும் எனத் தெரிவித்தனர்.

மன்னார், புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் அதானி குடும்பத்தின் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன எனவும், மன்னாரில் மக்கள் எதிர்ப்பு எழுந்துள்ளதாகவும் தெரிவித்த அவர்கள், இது தொடர்பில் ஆராய்ந்தே அனுமதி வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் விவரங்களை பெற்று தனியாக கூடி ஆராய்ந்த பின்பே அனுமதி வழங்க முடியும் எனவும் தெரிவித்தனர். இதன்போது, அதானி நிறுவன ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார பங்காளித்துவத்தை மேம்படுத்துவது குறித்துப் பேச்சு

### இந்தியாவுடன் இலங்கை ஆலோசனை

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் நேற்று (புதன்கிழமை) சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தென் கொரியாவில் இடம்பெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்கள் சபையின் 56 ஆவது வருடாந்த கூட்டத்தின் ஓர் அங்கமாக இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் நலனுக்கான பொருளாதார பங்காளிப்பு குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கும் அனைத்து உதவிகளுக்கும் வெளிவிவ கார அமைச்சர் அலி சப்ரி இதன் போது நன்றி தெரிவித்தார்.

நிதி அமைச்சர்கள், மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், முக்கிய உலகளாவிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் மூத்த அதிகாரிகள் என சுமார் 4,000 பேர் சியோலில் ஒன்றுகூடியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்கள் சபையின் 56 ஆவது வருடாந்த கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதிவரை



இடம்பெறவுள்ளது.

04 மே 2023 அன்று ஆளுநரின் அலுவல் அமர்வில் சப்ரி அந்தக் காலத்தின் பிற தலையீடுகளில் ஓர் அறிக்கையை வழங்குவார்.

இந்த விஜயத்தில் வெளி விவகார அமைச்சருடன் வெளி விவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அஜித் அபேசேகரவும்கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தடைச் சட்டம் எமக்குப் புதியது அல்லவாம்

### மூத்த ஊடகவியலாளர் குமாரசாமி செல்வகுமார் கூறுகிறார்

பயங்கரவாதத் தடைச் சட்டம் எமக்கு புதிதல்ல, ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படும் போதும் பேனாவுடனே அலைந்தோம் என மூத்த ஊடகவியலாளர் குமாரசாமி செல்வகுமார் தெரிவித்தார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று (புதன்கிழமை) யாழ் ஊடக அமையத்தால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஊடகவியலாளர்களது பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஊடகவியலாளர்களின் கருத்துக்களைக் காது கொடுத்து கேட்கக்கூட இந்த அரசு தயங்குகின்றது.

பயங்கவாதச் சட்டம் என்பது மூன்று தசாப்த காலம் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட போது இங்கே இருந்தது. இப்பொழுது அந்த சட்டத்தை மீண்டும் கொண்டுவர முயல்கிறார்கள்.

இந்த சட்டத்தை கண்டு நாங்கள் பயப்படவில்லை. அதாவது எமது சக ஊடகவியலாளர்கள் வீதிகளில் சுடப்பட்ட பொழுது நாம் பேனாவை மட்டுமே கையில் கொண்டு அலைந்தோம். இந்த அட்டூழியங்களை பேனா கொண்டு தான் சர்வதேசத்துக்குச் சொன்னோம்.

எங்களை சுடுகின்றார்கள் எங்களுக்கு உரிமை இருக்கிறது. இந்த நாட்டில் இருக்க எமக்கு உரிமை இருக்கிறது. நாங்கள் புதிதாக ஒன்றும் கேட்கவில்லை. இந்த நாட்டிலே வாழுகின்ற மக்கள் கேட்கின்ற அதே விடயங்களைத் தான் நாமும் கேட்கின்றோம்.

நாங்கள் புதிதாக எதனையும் கேட்கவில்லை. எமது சக ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு




காரணம் என்ன? பேனா தூக்கிய அனைத்து ஊடகவியலாளர்களும் உயிர் இருக்கும் வரை கூறிக்கொண்டே இருப்போம் சுடப்பட்டது அநீதி .

சுடப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு விசாரணை வேண்டும் நீதி வேண்டும் சர்வதேசம் இதனை பார்க்க வேண்டும் சராவதேசம் சர்வதேசம் என்று நாங்கள் சொல்கின்றோம்.

உலகில் சின்ன நிலபரப்பாக இருக்கும் இங்கு இடம் பெறும் விடயங்கள் பெரிதாக பேசப் படுகின்றனவே தவிர எந்தவொரு நடவடிக்கையும் எடுத்ததாக இல்லை.விலை பேசும் உலகில் ஒவ்வொரு நாடுகளும் தம்முடைய தேவைக் காக இலங்கையை பயன்படுத்துகின்றன.

இந்தமக்கள்சிறுபான்மையினரைக்கண்டுகொள்ளாமல் இருப்பதைநாங்கள்சுட்டிகாட்டி கொண்டே இருப்போம் எங்கள் ஊடகவியலாளர்கள் பணியாற்றி படுகொலை செய்யப்பட்டவர்களின் பாதையில் நாமும் பயணிப்போம். - என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதாரத்தைத் திடபடுத்தும் திட்டத்துக்கு கனடா ஆதரவு

கொழும்பு, மே 04

இலங்கையில்பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் திட்டத்துக்கு கனேடிய அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும் எனஇலங்கைக்கானகனேடிய உயர்ஸ்தானிகர்எரிக்வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று (புதன்கிழமை) நிதி இராஜாங்க அமைச்சர்ஷெஹான்சேமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித் துள்ளார்.

இலங்கைக்கானகனேடிய உயர்ஸ்தானிகராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எரிக் வோல்ஸ், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்துடன் இணைந்து இலங்கை மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களுக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களுக்கு கனேடிய அரசாங்கம் வழங்கி வரும் ஆதரவுதொடர்பாகவும்இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்கள் மற் றும் இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான மக்களின் அர்ப்பணிப்பு மற்றும்சிறிய மற்றும்நடுத்தர தொழில்முயற்சிகள்தொடர்பாக எடுக்கப்படும் முயற்சிகள் தொடர் பாகவும் இரா ஜாங்க அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் கனேடிய அரசாங்கம் வழங்கி வரும்ஆதரவு தொடர்பாக இரு தரப்பினரும் அதிக கவனம் செலுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கனேடிய அரசாங்கத்தின் ஆதரவு தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் இதன் போது இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

OKAYA ELECTRIC VEHICLES

dsl
We lead the way...!

# பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable
## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

## இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம் 3 இலவச சேவைகள்

conditions apply*

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.05.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 20 புதன்கிழமை 03.05.2023 கதிர் 47


## மட்டு. ஆரையம்பதியில் நீரில் மூழ்கி ஒருவர் சாவு



(பழுவூரான்)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் ஆற்றில் மூழ்கி ஒருவர் இன்று புதன்கிழமை உயிரிழந்தார்.

62 வயதுடைய 5 பெண் பிள்ளைகளின் தந்தையான பூபாலப்பிள்ளை யோகநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

செவ்வாய்க்கிழமை இரவு மீன்பிடிக்க ஆற்றிற்கு 2

## திட்டமிட்டு நசுக்கப்படும் தொழிலாளர் போராட்டம்

### செங்கொடி சங்கம் கண்டனம்



தொழிலாளர்களுக்கு எதிரான சகல வன்முறைகளையும் நிறுத்துமாறு இலங்கை செங்கொடி சங்கத்தின் தலைவர் செல்லையா சிவசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு, உழைப்புக்கான ஊதியம், வேலைத்தள பாதுகாப்பு, கர்ப்பிணித் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்கள் கேள்விக்குறியாகியுள்ளன.

வறுமை, போசாக்கின்மை, சிறுவர் கல்வி இடை விலகல், சிறுவர் உழைப்பு போன்றன அதிகரித்து வருகின்றன. இதனை எதிர்த்துச் செயற்படும் தொழிலாளர்களின் போராட்டங்களும் திட்டமிட்ட வகையில் நசுக்கப்பட்டு வருகின்றன.

200 ஆண்டுகளாக இந்த நாட்டுக்காகபி பாரிய பொருளாதாரத்தை உழைத்துக்கொடுத்த பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிரந்தர தொழில், தற்போது தற்காலிக தொழிலாக மாற்றம் அடைந்து வருகின்றது. அதே போல் ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களைக் கம்பனிகள் அடிமைகளாக நடத்தும் விதம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

எனவே, இந்தச் செயற்பாடுகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர சகல தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் பேதமின்றி ஒன்றுதிரள வேண்டும்.

- என்றார். (02)

# ரணிலின் அழைப்பை முன்னணி நிராகரிப்பு

### ஒற்றையாட்சிக்குள் தீர்வு இல்லை என்று கஜேந்திரகுமார் தெரிவிப்பு



**தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசில் அங்கம் வகிக்குமாறு மே தினத்தன்று தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்த நிலையில், ஒற்றையாட்சிக்குள் தீர்வு காணும் முயற்சி வீண் செயற்பாடு எனச் சுட்டிக்காட்டி, அந்த அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிராகரித்துள்ளது.**

கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகம் ஒன்றின் செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை விடயத்தில் தூரமாகிச் செல்வதால் எந்தப் பயனும் இல்லை என்று நான் தமிழ்க்கட்சிகளிடம் கூறுகின்றேன். இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமாயின் தயவுசெய்து இந்தப் பொறிமுறைக்குள் வந்து விசேடமாக நாடாளுமன்றத்தில் ஒரு அரசாக நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் மே தின நிகழ்வு உரையில் தெரிவித்திருந்தார்.

அவரது அழைப்பை முற்றிலுமாக நிராகரித்துள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு இல்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரே வரியில் ரணிலின் அழைப்பை நிராகரித்தார். (02)

## நாளை இலண்டன் பறக்கிறார் ரணில்

### உலகத் தலைவர்களுடன் பேச்சு



இலண்டன், வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

இலண்டனின் புராதன மாவெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் விழாவில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உலகத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

1953 ஆம் ஆண்டு மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்துகொண்ட சுமார் 8 ஆயிரத்து 200 பேரிலிருந்தும் இம்முறை கலந்துகொள்வோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு 2 ஆயிரத்து 200 பேருக்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராக உள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை வியாழக்கிழமை இலண்டன் செல்லவுள்ளார். நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள உலகத்தலைவர்களுடன் அவர் பேச்சும் நடத்தவுள்ளார். (02)

## கிழக்கில் தாண்டவமாடும் 'டெங்கு' 4 மாதங்களில் 4,300 தொற்றாளர்கள்




கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோயால் கடந்த ஏப்ரல் மாதம் மாத்திரம் இருவர் பலியாகியுள்ளனர். அதேவேளை, இவ்வருடம் ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 ஆயிரத்து 300 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணர் எஸ். அருள்குமரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

டெங்கு நோயால் திருகோணமலை மாவட்டத்தில் ஒரு மரணமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மரணமும் கடந்த ஏப்ரல் மாதம் பதிவாகியுள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது கிழக்கு மாகாணத்தில் இந்த வருடம் முதல் நான்கு மாதங்களிலும் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.

அதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,800 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் கடந்த மாதம் மட் டும் 600 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் மார்ச் மாதம் 600 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும், ஏப்ரல் மாதத்தில் 700 இற்கும் மேற்பட்ட நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நகரம், உப்புவெளி மற்றும் குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலங்களுக்குட்பட்ட பகுதிகளில் அதிகளவிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

- என்றார். (02)

## நடிகர் மனோபாலா காலமானார்!



இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் எனப் பன்முகம் கொண்ட மனோபாலா தமது 69 ஆவது வயதில் இன்று காலமானார்.

தமிழில் சுமார் 700 படங்களுக்கு மேலாக குணச்சித்திர வேடங்களில் நடித்துள்ளார்.

பெரும்பாலும் நகைச்சுவை வேடங்களில் நடித்து வரும் இவர் அண்மைக்காலமாக தனது யூடியூப் சேனல் மூலம் பிரபலங்களை நேர்காணல் செய்து வருகின்றார்.

இந்தநிலையில் அண்மையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதால் 2

## வர்த்தகத்துக்குச் சாதகமான சூழலை உருவாக்க ஜனாதிபதி அலுவலகத்தால் ஏழு செயலணிகள்

நாட்டில் வர்த்தக நட்பு சூழலை உருவாக்கும் நோக்குடன், ஏழு செயலணிகளின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வசதியாக சேவைகளை வழங்கும் 54 நிறுவனங்களை நிறுவ ஜனாதிபதி அலுவலகம் திட்டமிட்டுள்ளது.

முதலீடுகளின் செயல்திறனை அதிகரிக்கவும், அதற்குத் செலவிடப்படும் நேரத்தைக் குறைக்கவும், தேவையான தகவல்களை எளிதாகப் பெறுவதற்கான வாய்ப்பையும் இது எளிதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி, செயலணிகளுக்கு முறையான பொறுப்புகள் வழங்கப்படுவதோடு அதற்கான நிலையான முறைமைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகப் பிரவேசத்தை இலகுபடுத்துவதற்காக கம்பனி பதிவாளர் அலுவலகச் சட்ட கட்டமைப்புகள் 2

### புலிகளின் குண்டுகளைத் தேடி

# ராமேஸ்வரம் கரையில் தீவிர தேடுதல் வேட்டை



(ந.லோகதயாளன்)

தமிழ்நாடு இராமேஸ்வரம் அருகே கடற்கரை ஓரத்தில் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தை அடுத்துள்ள அக்காமடம் கடற்கரை பகுதியில் உள்ள காடு மற்றும் அதையொட்டிய கடற்கரைப் பகுதிகளில் வெடிகுண்டுகள் புதைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் தப்பிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இந்த இடத்தில் வெடிகுண்டுகளைப் பதுக்கி வைத்திருப்பதாக கியூ பிரிவு, பொலிஸாருக்குக் இரகசிய தகவல் கிடைத்ததாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து இன்று பிற்பகல் முதல் பல மணி நேரலாக இந்தப் பகுதியில் பொலிஸார் தீவிர தேடுதல் நடத்தி வருகின்றனர்.

இந்தச் செய்தி எழுதப்படும் வரை எந்த வெடிகுண்டும் கைப்பற்றப்படவில்லை.

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்:

## பொதுமக்களின் யோசனைகளை பெறும் காலம் மே 31 வரை நீடிப்பு



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கான காலம் மே 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று நீதி, 2




(எஸ்.நிதர்ஷன்)

ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் ஊடகப் படுகொலைகளுக்கு நீதி கோரியும் யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

சர்வதேச ஊடக சுதந்திர தினமான இன்று யாழ் ஊடக அமையத்தைச் சேர்ந்தவர்கள் தமது அலுவலக முன்றலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இலங்கையின் பொருளாதார மீட்சி குறித்து நம்பிக்கையுள்ளது ஆனால் நெருக்கடியிலிருந்து இன்னமும் நாடு விடுபடவில்லை!

## அலி சப்ரி தெரிவிப்பு



இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் அனைவருக்கும் சமமானவையாகக் காணப்படவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இதுவரை நம்பிக்கையளிக்கக்கூடிய சமிக்ஞைகள் தென்படுகின்றன. ஆனால் இலங்கை இன்னமும் நெருக்கடியிலிருந்து மீளவில்லைஎனவும்அவர்தெரிவித்துள்ளார்.

சனல்நியுஸ் ஏசியாவிற்கு வழங்கிய பேட்டியில் வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.


இலங்கையின்பொருளாதாரமீட்சிசாத்தியமாவது தொடர்பாக இலங்கை எவ்வளவு தூரம் நம்பிக்கை கொண்டுள்ளது என்ற கேள்விக்கு நம்பிக்கையின் ஒளிக்கீறுகள் காணப்படுகின்றன. ஆனால்நாங்கள் இன்னமும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நம்பிக்கைக்கு பல காரணங்கள் உள்ளன டொலர் நிலைவரம் ஸ்திரமானதாக மாறி யுள்ளமை,சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ளமை 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பணவீக்கம் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளமை போன்ற காரணங்களால் இந்த நம்பிக்கை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவி தொடர்பாக மறு ஆய்வு குறித்து இலங்கை எவ்வளவு தூரம் நம்பிக்கையுடன்உள்ளதுஎன்றகேள்விக்குவெளிவிவகார அமைச்சர் நாட்டில் ஸ்திரதன்மை உணவு காணப்படுகின்றது தட்டுபாடுகளும் நீண்டவரிசைகளும் இல்லாமல் செய்யப்பட்டுள்ள எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிதி உதவிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக மேற்கொள்ளவேண்டியப ல நடவடிக்கைளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம் எனத் தெரிவித்துள்ள அலி சப்ரி இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கை அனைவருக்கும்சமமானதாககாணப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# தேங்காய் தண்ணீரை ஏற்றுமதிசெய்ய முடிவு!



தேங்காய்தண்ணீர் மற்றும் இளநீருக்கு வெளிநாட்டு சந்தையில் மிக அதிக தேவை உருவாகி வருவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு சந்தையில், தேங்காய் நீர் ஓர் ஆற்றல் பானமாக விற்கப்படுகிறது. மேலும்ஒருலீற்றர்தேங்காய்தண்ணீர்கொண்ட ஒரு பொதி வெளிநாட்டு சந்தையில் 4-5 அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்படுகிறது.

இலங்கையில் இளநீரை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கை வெற்றிகரமாக நடந்து வருகிறது. ஆனால் தேங்காய் தண்ணீரை பொதி செய்து விற்பதில் கவனம் செலுத்துவதில்லை.

நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில், உள்நாட்டு நுகர்வு தவிர, பெரும்பாலான தேங்காய்கள் கொப்பரை உற்பத்தித் தொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

அதிக அளவு தேங்காய் தண்ணீர் வீணாகிறது என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கண்டறிந்துள்ளது.

எனவே பயன்படுத்தாமல் தூக்கி எறியப்படும் தேங்காய் நீரை பொதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்ட வாய்ப்பு உள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிடுகிறது.

# பசறை தமிழ்த் தேசியக் கல்லூரியின் இருமாடி கட்டடத்திற்குமுன் மண்சரிவு

பதுளைமாவட்டத்திலுள்ளபசறைதமிழ் தேசிய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு இருமாடிகட்டடத்திற்குமுன்பாகஉள்ளமண்மேடு செவ்வாய்க்கிழமை பெய்த கடும் மழைக் காரணமாக சரிந்துள்ளதாக கல்லூரியின் அதிபர் கே.எம்.சி. பிரபாகரன் தெரிவித்தார்.

இதேவேளை, மண் சரிவு ஏற்பட்டுள்ள கட்டடத்திற்கு அருகில் நிலத்தில் வெடிப்புகளும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம்தொடர்பாகமேலும்கருத்து தெரிவித்த அவர் –

இவ்வனர்த்ததால் மாணவர்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதைக் கருத்திற் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறித்த கட்டடத்தில் கல்வி கற்கும் தரம் 03,04 மற்றும் 05 வகுப்பு மாணவர்களுக்கு இன்று புதன்கிழமை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த அனர்த்தம் தொடர்பாக பசறை வலயக் கல்விக் காரியாலயம், ஊவா மாகாண கல்வித் திணைக்களம், தேசிய பாடசாலைகளுக்கு பொறுப்பான செயலாளர்,கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்குமார் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் பதுளை மாவட்ட கிளை என்பவற்றிற்கு அறிவித்துள்ளதுடன் பசறை பிரதேச செயலக அதிகாரிகள் இன்றைய நாளில் கள ஆய்வு மேற்கொண்டதாக அவர் மேலும் தெரித்தார்.

# சுற்றுலா பயணியிடம் பணம் கொள்கை!

இலங்கை சுற்றுலா பயணம் மேற்கொள்ள வந்த பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவரின் பையில் பெறுமதியான பணம் திருடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு லட்சம் இலங்கை ரூபா, 100 அமெரிக்க டொலர்கள் மற்றும் 200 ஆஸ்திரேலிய டொலர்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

காலி சமனல மைதானத்துக்கு அருகில் வைத்து நான்கு பேர் கொண்ட கும்பல் திருட்டில் ஈடுபட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் தனது பையை தரையில் வைத்துவிட்டு தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருட்டுக் கும்பல் அவ்விடத்திற்கு வந்ததுடன் அவர்களில் ஒருவர் பையை எடுத்துக்கொண்டு ரத்கம கடற்கரையை நோக்கி ஓடியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பிலிப்பைன்ஸ் பெண், ரத்கம பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளார்.

இந்நிலையில், காலி நகரம் மற்றும் கோட்டைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பை தொலைந்து போனதாகவும், அதில் இருந்த பணத்தை திருடர்கள் எடுத்துள்ளனர்.

எனினும் கடவுச்சீட்டு மட்டும் கிடைத்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இரண்டு கஜமுத்துக்களை கடத்திய இருவர் சிக்கினர்



இரண்டு கஜமுத்துக்களைக் கடத்திச் சென்ற இருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய அம்பாறை மாவட்டம், பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல் ஹலாம் வீதி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே விசேட அதிரடிப் படையினர் குறித்த சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது கல்முனை விசேட அதிரடிப் படையினருக்கு உதவியாக அறுகம்பை முகாம் விசேட அதிரடிப் படையினரும் களமிறங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நடவடிக்கையின் போது 2 கஜமுத்துக்களைக் கடத்தி வந்த 37, 60 வயதுடைய இரண்டு சந்தேகநபர்களை மாறு வேடத்தில் சென்ற விசேட அதிரடிப் படை அணி கைது செய்தது.

கஜமுத்துக்களையும்சந்தேகநபர்களையும் பொத்துவில் பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை விசேட அதிரடிப் படையினரும்பொலிஸாரும் மேற்கொண்டு வருகின்றனர். (02)



# சிவனொளிபாத மலைக்கான யாத்திரைக் காலம் நிறைவு!

எதிர்வரும்வெசாக்பௌர்ணமிதினத்துடன் சிவனொளிபாத மலை யாத்திரை காலம் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 6ஆம் திகதியுடன் யாத்திரை காலம் நிறைவடைவதாக ஸ்ரீபாத விஹாராதிபதி ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் சப்ரகமுவ மாகாண பிரதான சங்க நாயக்கர் பெக்கமுவே ஸ்ரீஊண தம்மாதின்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் புன் பௌர்ணமி தினத்துடன் சிவனொளிபாத மலை யாத்திரை ஆரம்பமானது.

இந்த யாத்திரை காலம் சுமார் ஆறு மாதங்கள் வரையில் நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாத்திரை கால நிறைவைத் தொடர்ந்து புனிதப்பொருள்கள்ஊர்வலமாகபல்மடுல்ல கல்பொத்தாவெல விஹாரைக்கு எடுத்துச் செல்லப்பட உள்ளன.

# நிறைய மதுப் போத்தல்களுடன் அம்பாறையில் இருவர் கைது



அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாகக் கொண்டு சென்ற மதுபானப் போத்தல்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், சவளக்கடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பியர் மற்றும் மதுபானப் போத்தல்கள் ஓட்டோவில் வெல்லாவெளிப் பகுதிக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்யப்படுகின்றன என்று சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான டீ.எம்.எஸ்.கே தசநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய வீதி ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஓட்டோ ஒன்றில் 33, 38 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் 175 இற்கும்அதிகமானசாராயப்போத்தல்களையும், ஒரு தொகுதி பியர் போத்தல்களையும் சூட்சுமமான முறையில் மறைத்து எடுத்துச் சென்றனர்.

சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழுவினர் இரண்டு சந்தேகநபர்களைக் கைது செய்ததுடன் ஓட்டோவையும், அதில் இருந்த மதுபானப் போத்தல்களையும் மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மதுபானப் போத்தல்கள் சுமார் பல இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று சவளக்கடைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அளவுக்கு அதிகமான மதுபானப் போத்தல்களைத் தம்வசம் வைத்திருந்தமை மற்றும் மதுபானப் போத்தல்களை உரிய அனுமதி இன்றி சட்டவிரோதமாகப் பதுக்கிக் கொண்டு சென்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இரண்டு சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் சவளக்கடைப் பொலிஸார், அவர்களைக் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (02)

## வர்த்தக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவதற்காக வர்த்தக பதிவுக்கான செயலணி உள்ளடக்கப்படும்.

இந்தச்செயலணியின் ஊடாக டிஜிட்டல் கையொப்பக் கட்டமைப்பை உருவாக்குதல், கம்பனிச் சட்டத்துக்கு இறுதிப் பயனாளிகளின் உரிமையை இணைத்தல் மற்றும் கம்பனிப் பதிவாளரினால் பயன்படுத்தப்படும் படிவங்களை எளிமைப்படுதல் உள்ளிட்ட முக்கிய சேவைகளை வழங்கும்.

காணிப் பதிவு, தேவையான சான்றிதழ்கள் மற்றும் தொடர்புடைய கொடுப்பனவுகள் பற்றிய நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சொத்துப் பதிவு குறித்த செயலணியொன்றும் அமைக்கப்படவுள்ளது.

நில அளவைத்திணைக்களம், கொழும்பு மாநகர சபை, மேல் மாகாண வருவாய் திணைக்களம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் உட்பட ஏழு நிறுவனங்கள் இந்தச் செயலணியில் உள்ளடக்கும்.

காணி உறுதி விபரங்களைத் தேடல், இலத்திரனியல் உறுதிப் பதிவு மற்றும் கட்டடம்/வீதி எல்லைச் சான்றிதழைப் பெறுவதற்கான நேரம், செலவு மற்றும் நடைமுறைகளைக் குறைக்க ஈ-காணி முறைமை இந்தச்செயலணியின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

இந்தச் செயலணி முதன்மையாக கொழும்புப் பகுதியில் அந்தச் செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்துவதோடு, காணிப் பதிவேட்டு தரவுகளை பெற ஒன்லைன் வசதி அளித்தல், முத்திரைக்கட்டணத்தைக் கணக்கிடுவதற்கும், பத்திரங்களைப் பதிவு செய்வதற்கும் ஒன்லைன் வசதிகளை வழங்குதல், காணி ஆவணத்தில் உள்ள திட்ட விபரங்களை இணையதளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேல்மாகாணத்துடன் தொடர்புடைய காணிகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிய இணைய சேவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புகாணிபதிவுஅலுவலகத்தில் காணிஉரித்துதொடர்பானதகவல்களைத் தேடுவதற்கான ஒன்லைன் வசதி, மேல் மாகாண வருவாய்த் திணைக்களத்திற்கான தானியங்கி முத்திரைக் கட்டணக் கணக்கீட்டு முறை மற்றும் கொழும்பு காணிப் பதிவேட்டில் பத்திரங்களைப் பதிவு செய்வதற்கான தானியங்கி முறைமை உள்ளிட்ட சேவைகளை வழங்க இந்தச் செயலணி மேற்கொள்ளும்.

இந்தச் செயற்பாடுகள் 2023 இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செயலணிக்கு அதன் இலக்குகளை அடைவதற்கு வசதியாகவும், நிறுவனங்களுக்கு இடையேயான இணைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் சிக்கல்களைத் தீர்க்கவும் தொழில்நுட்ப அமைச்சு தேவையான ஒத்துழைப்பை வழங்கும் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

## நடிகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் குணமடைந்து வீடு திரும்பிய நிலையில் இன்று அவர் உடல் நலக்குறைவால் காலமானார். (02)

## பொதுமக்களி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம் தொடர்பான யோசனைகளை அனுப்புமாறு பொதுமக்களையும்சிவில்அமைப்புக்களையும் கோருவதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த யோசனைகள் மற்றும் கருத்துக்களைக் கவனத்தில்கொண்டு புதிய சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்படும் என்றும் நீதி அமைச்சர் மேலும் கூறினார். (02)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று வலை விரித்த இவர், அதனை எடுக்க மீண்டும் அதிகாலையில் சென்றுள்ளார். வலையினை எடுத்துக் கொண்டிருக்கும் போது வலிப்பு நோய் ஏற்பட்டு அவர் ஆற்றினுள் விழுந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த நபருக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருந்ததாகவும் இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் வலிப்பு ஏற்பட்டு இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சடலத்தைப் பார்வையிட்டதுடன், அதனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பணிப்புரை விடுத்தார்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு திருத்தங்களை வழங்கத் தயாராகவுள்ளோம்

## திஸ்ஸ அத்தநாயக்க பகிரங்கம்



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் கட்சி அரசாங்கம் கலந்தாலோசிக்க வேண்டும். இதன் போது திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை வழங்குவதற்குத் தயாராகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள்களின் விலைகள் குறுகிய காலத்துக்குள் இரு சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டுள்ளன.

ஆனால் அதனால் ஏற்படக் கூடிய ஏனைய பயன்கள் இதுவரையில் மக்களை சென்றடையவில்லை. எனவே இதனால் கிடைக்கக் கூடிய சலுகைகளை அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிட வேண்டும்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சிங்கப்பூரில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், ஒரு வாரம் கடந்துள்ள நிலையிலும் அது தொடர்பான முன்னேற்றங்கள் எவையும் அரசாங்கத்தால் அறிவிக்கப்படவில்லை.

எமது பொருளாதாரத்தை இலகுவாகக் கட்டியெழுப்பக் கூடியளவுக்கு நஷ்டஈட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பை இழக்கும் வகையில் செயற்பட்டுள்ள அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்றது.

ஆனால் அதிலுள்ள ஏற்பாடுகள் முற்று முழுதாக அரசாங்கத் துக்கு எதிராகச் செயற்படுபவர்களை முடக்கும்வகையிலேயே அமைந்துள்ளன.

எனவே அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்து , அவர்களின் முன்மொழிவுகள் , பரிந்துரைகளைப் பெற்று திருத்தங்களை மேற்கொண்டு அதன் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

பொதுத் தேர்தலொன்றின் ஊடாக ஆட்சியமைக்கக் கூடிய பலம் ஐக்கிய மக்கள் சக்திக்கு காணப்படுகிறது. எனவே எவருடனும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டிய தேவை எமக்குக் கிடையாது. – என்றார்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பொதுமக்களின் கருத்துக்கள் கேட்டறிவு

## நீதி அமைச்சர் விஜயதாஸ கோருகிறார்



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் பற்றிய யோசனைகளைப் பொதுமக்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நீதியமைச்சுக்கு அனுப்பிவைக்கமுடியும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் பல்வேறுபட்ட எதிர்க் கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், சகல தரப்பினரதும் யோசனைகளுக்கு அமைவாக அவசியமானதும், ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பக்சகடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அதன்படி நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரிடமிருந்தும் திருத்த யோசனைகள் கோரப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மாத்திரமே அதன் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது.

அதேவேளை முக்கிய அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் முழுமையான வாபஸ் பெற வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என ஏற்கனவே அறிவித்துள்ளன.

இந்நிலையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் பற்றிய யோச னைகளைப் பொதுமக்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாகத் தமக்கு அனுப்பிவைக்கமுடியும் என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதன்படி இலக்கம் – 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு – 10 என்ற முகவரியின் ஊடாகவோ அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ பொது மக்கள் தமது யோசனைகளை நீதியமைச்சுக்கு அனுப்பிவைக்க முடியும்.

# பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தின்போது மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாப்பது அவசியம்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் வலியுறுத்தல்

மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு பயங்கரவாத செயற்பாட்டையும் தாம் கடுமையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம், இருப்பினும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தின்போது மனித உரிமைகளைப் பாதுகாக்கவேண்டியது இன்றியமையாததாகும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கத்தால் முன்மொழி–யப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் தொடர்பில் பல்வேறுபட்ட எதிர்க்கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், சகலதரப்பினரதும் யோசனைகளுக்கு அமைவாக அவசியமானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச கடந்த வாரம் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டின் முக்கிய அரசியல் கட்சிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத்தரப்பினரிடமிருந்தும் திருத்த யோசனைகள் கோரப் பட்டுள்ள நிலையில், இதுவரையில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மாத்திரமே அதன் யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளது.

மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய அனைத்துவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் தாம் கடுமையாகக் கண்டிப்பதாகவும், அவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்துள்ள அந்த இயக்கம், அதேவேளை பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான போராட்டத்தின்போது மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளது.

அதன்படி உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கான வரைவிலக்கணம் மிகவும் பரந்துபட்டவகையில் அமைந்திருப்பதாக அந்த யோசனைகளில் சுட்டிக்காட்டியுள்ள சமூக நீதிக்கான தேசிய இயக்கம், அந்த வரைவிலக்கணத்தையும் சந்தேக நபரொருவரைக் கைதுசெய்வதற்கும், தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கும் பொலிஸாருக்கு அதிகாரத்தை வழங்கக்கூடியவகையில் உள்ளடக் கப்பட்டுள்ள சரத்தையும் திருத்தியமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி இஸ்ரேல் – பாலஸ்தீன் மோதலை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான முயற்சிகளின்போது 'பயங்கரவாதம்' என்ற பதத்துக்கு ஜோர்ஜ் மிச்சேல் என்பவரால் முன்மொழியப்பட்ட வரைவிலக்கணத்தையும் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் தமது யோசனைகளில் உள்ளடக்கியுள்ளது. மேலும் பயங்கரவாத செயற்பாடாக வரையறுக்கப்படவேண்டிய குற்றங்கள், இந்தச் சட்டத்தின்கீழ் சந்தேகநபரொருவரைக் கைதுசெய்யும்போது பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள் என்பன தொடர்பிலும் சமூகநீதிக் கான இயக்கம் திருத்தங்களை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்பிராந்திய ஒத்துழைப்புத் தொடர்பான உயர்மட்டக்குழுவின் 21 ஆவது கூட்டத்தொடருக்கான தலைவராக மொஹான் பீரிஸ்!



தென்பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பான உயர்மட்டக்குழுவின் 21 ஆவது கூட்டத்தொடரின் தலைவராக ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைப்பு ரீதியான கூட்டத்தின்போதே மொஹான் பீரிஸை தலைவராக நியமிப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது கடந்த 1980 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தென்பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பான உயர்மட்டக்குழுவின் முக்கியத்துவம் தொடர்பாகச் சுட்டிக்காட்டிய மொஹான் பீரிஸ், தென்பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பான உயர்மட்டக்குழு உலகளாவிய ரீதியில் தென்பிராந்திய நாடுகள் அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திறம்பட முன்னெடுத்துச்செல்வதற்கும் காலநிலை மாற்றம், சுகாதாரம், சக்திவலு, உணவுப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைசார் சவால்களை உரியவாறு கையாள்வதற்கும் பல்வேறு வகையில் பங்களிப்புச்செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

தென்பிராந்திய ஒத்துழைப்பு தொடர்பான உயர்மட்டக்குழுவின் 21 ஆவது கூட்டத்தொடர் 'கொவிட் 19 பெருந்தொற்றின் பின்னரான மீட்சியைத் துரிதப்படுத்தலும் தென்பிராந்திய ஒத்துழைப்பின் ஊடாக 2030 ஆம் ஆண்டுக்குரிய நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டத்தை நடைமு–றைப்படுத்தலும்' என்ற தொனிப்பொருளில் இம்மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமிதவை சந்தித்தார் இந்திய விமானப்படைத் தளபதி





இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீப் மார்ல் வி.ஆர்.சௌதாரி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனை சந்தித்தார்.

இந்த சந்திப்பு கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இடம்பெற்றது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த இந்திய விமானப்படைத்தளபதி இராஜாங்க அமைச்சரால் வரவேற்கப்பட்டதை தொடர்ந்து இருவருக்குமிடையில் சுமுகமான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தியா, இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் உதவிக்கு நன்றி தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பரஸ்பர நன்மை மற்றும் பிராந்திய பாதுகாப்பிற்காக நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார். எயார் சீப் மார்ல் வி.ஆர்.சௌதாரி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்ததோடு, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர வேண்டும் என்றும், இந்த விடயத்தில் தனது ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்த சந்திப்பை நினைவு கூறும் வகையில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த சந்திப்பில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் விகாஸ் சூத் கலந்துகொண்டார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## பத்திரிகைச் சுதந்திரம் மக்களாட்சியின் குரல்

**இன்று பத்திரிகை சுதந்திர தினம். கடந்த 30 வருடங்களாக இந்தத் தினத்தை உலகம் நினைவுபடுத்தி வருகின்றது. யுனெஸ்கோவின் பரிந்துரையின் அடிப்படையில் 1993 இந்தத் தினத்தை உலக பத்திரிகையாளர் தினமாக ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவை அங்கீகரித்தது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தையும் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களின் சுதந்திரத்தையும் பேணிப் பாதுகாத்து மக்களாட்சியைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு இந்த விழிப்புணர்வு நாள் கொண்டுவரப்பட்டபோதும் இந்த உலகம் கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நெருக்குவதாகவும் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்தானதாகவுமே தொடர்ந்தும் இருந்து வருகின்றது என்பதும் பெரும் வேதனை.**

**ஊடகங்களின் மீது வெறுப்பு காட்டுவதென்பது பல நாடுகளில் அதீத தேசியவாதத்தின் அடையாளமாக இருக்கிறது. இலங்கையிலும் அதுவே நடக்கின்றது. ஆட்சியாளர்களைக் கேள்விக்குட்படுத்தும் பத்திரிகைகள் மீது அதிகாரத்தில் உள்ளவர்கள் காழ்ப்புணர்வை காறி உமிழ்கிறார்கள். அவர்களின் வாயை அடைப்பதில் முழுக் கவனத்தோடு செயற்படுகின்றார்கள்.**

**இதழியல் மீது முன்னுதாரணமற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு, இதழியலையே முடக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றார்கள். சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அதற்கொரு எடுத்துக்காட்டு.**

**பத்திரிகையாளர்களுக்குத் தடைவிதிப்பது, அரச அங்கீகாரம்பெற்றவர்கள் என்று அவர்களைத் தரம்பிரிப்பது, தகவல் தர மறுப்பது, பத்திரிகையாளர்கள் குறித்து அரசு அதிகார வட்டத்தில் மோசமான மொழியாடலை உருவாக்கிவைத்திருப்பது என்று பத்திரிகையாளர்களை முடக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. போரின் போது பத்தீரிகையாளர்கள் மீதும் பத்திரிகை நிறுவனங்கள் மீதும் வெளிப்படையான தாக்குதல்கள் இடம்பெற்றன என்றால், இப்போது மறைமுகமாகவும் அடக்குமுறைகள் தொடர்கின்றன.**

**பத்திரிகையாளர்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அவர்களை முடக்குவதற்கும் அவதூறுச் சட்டங்களும் பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற தேசிய பாதுகாப்புச் சட்டங்களும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.**

**பத்திரிகைச் சுதந்திரம் என்பது வெறுமனே பேசுவதற்கும் எழுதுவதற்குமான சுதந்திரமன்று. அது மக்களாட்சியைத் தாங்கி நிற்கும் தூண், அதனைப் பாதுகாக்கும் குரல். அதனை மேம்படுத்தும் களம். அதனை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்திச் செல்லும் ஊடகம். எனவே எத்தனை தடைகள் வரினும் அதனைப் பாதுகாத்துப் பேணுவது ஒவ்வொருவரதும் கடமை.**

# யாழில் ஒருவருக்கு மலேரியா தொற்று!

யாழ்ப்பாணத்தில் ஒருவர் மலேரியா தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலையே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் –

இலங்கையில் மலேரியா நோயின் உள்ளூர் தொற்று இறுதியாக 2012 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டது. அதன்பின்னர் இது வரை உள்ளூர் பரம்பல் காரணமாக எந்தவொரு நோயாளியும் இனங்காணப்படவில்லை.

ஆனாலும் மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு சென்று இலங்கைக்கு திரும்பி வந்தவர்களில் பலருக்கு மலேரியா நோய் இனங்காணப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் இது–வரையான காலப்பகுதியில் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று திரும்பியவர்களில் 15 பேர் மலேரியா நோயுடன்




இனங்காணப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலும், மேற்கு ஆபிரிக்க நாடொன்றுக்கு சென்று திரும்பிய உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மலேரியா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் எமது நாட்டில் 14 வருடங்களுக்குப் பின்னர் மலேரியா நோயால் ஓர் இறப்பு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பேருவளை பிரதேசத்தில் இருந்து இரத்தினக்கல் வியாபார நோக்கத்துக்காக ஆபிரிக்கா சென்று திரும்பிய ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். எமது நாட்டில் மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகள் உலர்வலயப் பிரதேசங்களில் இன்னமும் காணப்படுகின்றன.

இந்நிலையில் மலேரியா பரம்பல் உள்ள நாடொன்றுக்கு சென்று அங்கு நோய் தொற்றுக்குள்ளாகி வருபவர்கள் மூலம் உள்ளூரில் மலேரியா பரம்பல் ஏற்பட வாய்ப்புள்ளது.

வெளிநாடொன்றில் மலேரியா தொற்றுக்குள்ளாகும் ஒருவருக்கு ஒரு வருட காலம் வரை எந்தவித நோய் அறிகுறிகளும் இல்லாது காணப்படலாம்.

ஆனால் அவர் மூலம் ஏனையவர்களுக்கு இந் நோய் பரவும் வாய்ப்புள்ளது. எனவே மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் மலேரியா தடுப்பு மருந்தகளைப் பாவிக்க வேண்டும். தற்போது, தென்னாபிரிக்கா, உகண்டா, சூடான், ரூவண்டா, மொசாம்பிக், மடகஸ்கார், மத்திய ஆபிரிக்க குடியரசு, கானா, சைபீரியா, தன்சானியா, சிம்பாவே, பப்புவா நியூகினியா, சீரோலியான், சவூதி அரேபியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் மலேரியா பரம்பல் காணப்படுகிறது.

எனவே மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தடுப்பு மருந்தை பாவிக்க ஆரம்பிப்பதன் மூலம் மலேரியா தொற்றிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

இத்தடுப்பு மருந்துகளைத் தங்களுக்கு அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் அல் லது யாழ்ப்பாணம் பண்ணை சுகாதார கிராமத்திலுள்ள மலேரியா தடை இயக்க பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மலேரியா பரம்பல் உள்ள நாடுகளுக்கு சென்று திரும்பி வந்த பின்னர் மலேரியா குருதிப் பரிசோதனையை கிரமமாக செய்வதன் மூலம் மலேரியா தொற்று உள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். எனவே எமது நாட்டில் மலேரியா நோயின் பரம்பலைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் வேண்டிநிற்கின்றோம்.' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு மற்றும் இரத்த பரிசோதனைகளில் மேற்கொள்ளப்பட்ட மோசடிகள் அம்பலம்!

டெங்கு பரிசோதனை மற்றும் முழு இரத்த எண்ணிக்கை பரிசோதனை ஆகிய இரண்டிற்கும் நோயாளிகளிடம் அதிக கட்டணம் வசூலித்த 12 தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 12 நிறுவனங்களுக்கு நோயாளிகளிடம் இருந்து சம்பந்தப்பட்ட சோதனைகளுக்கு கட்டணம் வசூலித்தற்காக 9.4 மில்லியன் ரூபா வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று நுகர்வோர் விவகார அதிகாரசபையின்



மூத்த புலனாய்வு அதிகாரி ரஞ்சன் தெரிவித்துள்ளார். நுகேகொட, கல்கிசை, மாளிகாகந்த மற்றும் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றங்கள் வழங்கிய நீதிமன்ற உத்தரவுக்கமைய குறித்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட விசேட சோதனைப் பிரிவினால் கடந்த நான்கு மாதங்களாக சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டன என மூத்த புலனாய்வு அதிகாரி ரஞ்சன் தெரிவித்துள்ளார்.

# 25 வீதமானோர் விட்டமின் டி குறைபாட்டினால் பாதிப்பு

நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 25 வீதமானோர் விட்டமின் டி குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போக்கு பிரிவின் வைத்திய நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களைக் கொண்டு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இது சற்று ஆபத்தான சூழ்நிலையாக உருவாகக்கூடும் எனவும் வைத்திய நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

விட்டமின் டி குறைபாட்டைக் குறைக்க முடிந்தவரை சூரிய ஒளியில் இருப்பது முக்கியமானது.

ஆனால், நாட்டில் தற்போது சூரிய ஒளியின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. எனவே, விட்டமின் டி இனை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட நேரம் சூரிய ஒளியில் இருக்கக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குழந்தைகள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் விட்டமின் குறைபாடு தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியது




அவசியமாகும்.

சில மாதங்களுக்கு ஒருமுறை விட்டமின் குறைபாடு குறித்து வைத்தியரை அணுகி ஆலோசனை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் வைத்திய நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# உயிருக்குப் போராடியவரை காப்பாற்ற உதவிய நாய்கள்

கண்டி - அலதெனிய பிரதேசத்தில் அயல் வீட்டு நபர் மரத்தில் இருந்து கீழே விழுந்த தகவலை அவரது சகோதரருக்கு தகவல் வழங்கிய இரண்டு நாய்கள் தொடர்பில் அபூர்வ தகவல் வெளியாகியுள்ளனது.

62 வயதான அன்வர், தனது தோட்டத்தில் ஜாதிக்காய் பறித்து கொண்டிருந்த நிலையில் சிறிது நேரத்தில் மரத்திலிருந்து விழுந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அவரது சகோதரி கூறியவை வருமாறு -

அண்ணன் ஜாதிக்காய் பறிக்கும் இடத்திற்குச் சென்று இரண்டு முறை பார்வையிட்டேன். பின்னர் வீட்டிற்கு வந்து துணி துவைக்க ஆரம்பித்துவிட்டேன். துணி துவைக்கும் போது, பக்கத்து வீட்டு நாய்கள் இரண்டு ஜாதிக்காய் தோட்டத்தின் ஓரத்தில் இருந்து குரைக்க ஆரம்பித்தன. பன்றிகள் வந்துவிட்டன என்று நினைத்துக்கொண்டு மீண்டும் துணிகளைத் துவைத்தேன்.

நான் துணிகளை துவைத்துக் கொண்டிருக்கும் போது நாய் ஒன்று வந்து, தோட்டத்தைப் பார்த்து குரைக்க ஆரம்பித்துள்ளது. எனினும் நான் பெரிதாகக் கண்டுக்கொள்ளவில்லை. 3 முறை தோட்டத்தை நோக்கி சென்று மீண்டும் என்னிடம் வந்தது.

பின்னர் எனது ஆடையை கடித்து இழுத்தது. சந்தேகமடைந்து நான் அவ்விடத்திற்கு சென்றேன்.

அங்கு மற்ற நாய் அண்ணனை எழுப்பி விடுவதற்கு முயற்சித்து குறைத்துக் கொண்டிருந்தது.

அங்கு சகோதரன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

உடனடியாக அவரை வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சையளிக்கப்பட்டது.

அவரை இரண்டு நாய்கள் இணைந்து காப்பாற்றிவிட்டதுன என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது' என சகோதரி குறிப்பிட்டுள்ளார்.